நாள்.25.10.2024

**அசல் வழக்கு எண். 26/2022**

பெயர் - சுவாமிநாதன்

த/பெ.காளிமுத்து

**பி.வா.சா.2 - வாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

நான் குடியிருக்கும் வீட்டின் சர்வே எண் தெரியுமா என்றால் தெரியாது. யாரிடம் வாங்கினேன் என்றால் முதல் வாதி சின்னதம்பியிடமிருந்து வாங்கினேன். என் வீட்டிற்கு செல்லும் பாதை யாருக்கும் சொந்தம் என்றால் எனக்கு சொந்தம். அந்த பாதையை கிரையம் வாங்கியுள்ளேனா என்றால் ஆமாம். அந்த பத்திரத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. என்னுடைய பத்திரத்தில் நான்கெல்லையில் எந்த பக்கத்தில் ரோடு உள்ளது என்றால் என் வீட்டின் மேற்கு பக்கத்தில் பாதை உள்ளது. நான்கெல்லையில் மேற்கு பக்கத்தில் யாரை காண்பித்துள்ளேன் என்றால் சின்னதம்பியின் நிலத்தை காண்பித்துள்ளேன். சர்வே எண்.55/2 ஏ 2 யாருக்கு சொந்தம் என்றால் தெரியாது. எனது நிருபணவாக்குமூலத்தில் மேற்படி சர்வே எண் பற்றி சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. சர்வே எண்.63/2 ஏ 1 மற்றும் 63/8 யாருக்கும் சொந்தம் என்றால் தெரியாது. எனக்கு பாசன வாய்க்காலுக்கும், வடிகால் வாய்க்காலுக்கும் வித்தியாசம் தெரியுமா என்றால் தெரியும். மழைகாலத்தில் வடிந்து ஓடுவதற்கு பயன்படுவது வடிகால் வாய்க்கால் என்றால் சரிதான். பாசனவாய்க்கால் என்பது கல்லணையிலிருந்து வரும் தண்ணீர் செல்லும் வாய்க்கால் என்றால் சரிதான். அதிராம்பட்டிணம் - மன்னார்குடி ரோடு கிழக்கே உள்ளது. அதிலிருந்து பிரிந்து மேற்கே போகும் இடத்திற்குதான் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதிராம்பட்டிணம் -

மன்னார்குடி ரோட்டிலிருந்து பிரிந்து மேற்கு நோக்கி செல்லும் சாலையின் மேற்குபக்கத்தில தென்வடலாக செல்லும் ஊராட்சி சாலை உள்ளது என்றால் சரிதான். ஊராட்சி சாலையிலிருந்து அதிராம்பட்டிணம் - மன்னார்குடி ரோடு வரை வடிகால் கான் உள்ளது என்றால் இல்லை. ஊராட்சி சாலையிலிருந்து முழுவதும் வடிகால் கான் இல்லையா, இல்லை ஒரு பகுதியில் மட்டும் இல்லையா என்றால் வடபுறம் முழுவதுமாக இல்லை, தென்புறம் பாதிவரை உள்ளது. வைத்தியலிங்கம் வீடு வரை ரோட்டின் தென்பக்கத்தில் வடிகால் கான் உள்ளதா என்றால் பாதி உள்ளது பாதி இல்லை. வாதி சின்னதம்பி இடம் தெரியுமா என்றால் தெரியும். அவர் இடம் வரை வடிகால் கான் உள்ளதா என்றால் உள்ளது. அதிலிருந்து அதிராம்பட்டிணம் - மன்னார்குடி ரோடு வரை இடையில் சுமார் 200 அடி தூரம் வடிகால் கான் உள்ளது என்றால் சரிதான். சின்னதம்பி எதற்காக வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் அவர் இருக்கும் இடத்திலிருந்து கிழக்கே உள்ள அதிராம்பட்டிணம் - மன்னார்குடி ரோடு வரை இடைப்பட்ட இடத்தில் எடுக்கப்பட்ட வடிக்கால் கானை திருப்பி வைக்குமாறு வழக்கு தாக்கல் செய்துள்ளார். ஊராட்சி சாலைக்கு மேற்கே PWD வாய்க்கால் உள்ளது என்றால் சரிதான். அது ஊராட்சி சாலைக்கு கீழ்புறத்தில் வடக்கே சென்று மீண்டும் கிழக்கு நோக்கி செல்கிறது என்றால் சரிதான். அந்த PWD வாய்க்காலைதான் நாங்கள் வடிகால் வாய்க்கால் என்று சொல்கிறோம் என்றால் சரிதான். எங்கள் வீட்டிற்கு செல்லும் பாதை வதிதான் விட்டுக்கொடுத்துள்ளார் என்றால் நானும் விட்டுகொடுத்துள்ளேன், அவரும் விட்டுக்கொடுத்துள்ளார். பொதுவாக கிழக்கே செல்லும் தண்ணீர் எளிதாக செல்லும் மேற்கு நோக்கி செல்லும் தண்ணீர் எதிர்க்கும் என்றால் சரிதான். வாதி கிழக்கு நோக்கி வடிகால் வாய்க்கால்

உள்ளது என்று சொல்கிறார் நான் மேற்குநோக்கி சென்றி வடக்கே திரும்பி பாசன வாய்க்கால் மூலமாக செல்கிறது என்று சொல்கிறேன் என்றால் ஆமாம். வைத்தியலிங்கம் வந்துள்ளரா என்றால் ஆமாம். அவர் என்னை அழைத்து வந்தாரா என்றால் இல்லை. நான் தான் அவரை அழைத்து வந்தேன். அவர்இடத்தில் வடிக்கால் கான் வைக்ககூடாது என்பதற்காக பொய்சொல்கிறேன் என்றால் இல்லை. எதிர்வழக்குரை தாக்கல் செய்த விபரம் தெரியுமா என்றால் தெரியும். அந்த விபரத்தை வழக்கறிஞரிடம் யார் சொன்னது என்றால் நான்தான் சொன்னேன். சர்வே எண் விபரம் நான் சொல்லவில்லை என்றால் ஆமாம். அதிராம்பட்டிணம் - மன்னார்குடி ரோட்டின் மேல்புறத்தில், 1ம் பிரதிவாதியின் வீட்டிற்கு கீழ்புறத்தில் வடிகால் கான்உள்ளது என்றால் சரிதான். அதில்தான் தண்ணீர்போய் விழும் அதை மறைத்து நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் இல்லை. வைத்தியலிங்கம் வீட்டின் தண்ணீர் எந்த பக்கம் செல்கிறது என்றால் மேற்கு நோக்கி செல்கிறது. அவருடைய வீட்டின் தென்புறத்தில் வடிகால் வாய்க்கால் உள்ளதா என்றால் இல்லை. வாய்க்கால் ஒட்டிதான் வைத்தியலிங்கம் வீடு உள்ளது என்றால் ஆமாம். நான் வைத்தியலிங்கம் கேட்டுக்கொண்டதின்பேரில் வடிகால் கான் போககூடாது என்பதற்காக அவருக்கு எதிராக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>**மறுவிசாரணை இல்லை.**</u>

*Taken down by the typist to my dictation*
*in open Court read over to the*
*witness admitted and acknowledged*
*by him/her to be Correct.*
Sd/- S.Kavipriya,,B.A.,L.L.B.,

District Munsif, Pattukkottai.